**செய்தி வெளியீடு எண்: 419** **நாள் :23.08.2016**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (23.08.2016) மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக்கூட்டம், சென்னை, சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் ஆணையின்படி, தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை விரைவு படுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் உத்தரவின்படி, புதிய குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு 60 நாட்களுக்குள் அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 16 இலட்சத்து 50 ஆயிரத்து 147 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வழங்குவதற்கு தயாராக உள்ள 20 ஆயிரத்து 381 குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை, 4 இலட்சத்து 90 ஆயிரத்து 181 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், இன்று வரையில், 5 இலட்சத்து 33 ஆயிரத்து 765 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 33 ஆயிரத்து 414 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, **மாண்புமிகு அம்மா** அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வகை முகாம்கள் நடத்தப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் உத்தரவின்படி, கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஓட்டுநர்கள் மட்டுமல்லாது கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த **5** ஆண்டுகளில், இதுவரை **894** நபர்கள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள் நியாய விலை அங்காடிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள், ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்பட்டுள்ளனவா என்றும், அங்காடிகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு சீரான முறையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றனவா என்றும், கண்டறிய வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு.T.ஆனந்த், இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**